1971 டிசம்பர் 15]

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட நோயில்கள் பல தமிழ் நாட்டில் இருக்கின்றன. அவற்றைப் பார்ப்பதற்கு பல இடங்களிலிருந்தும் பில்கிரிம்கள் வருகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு, டிரைனேஜ் போன்ற வசதிகள் செய்து கொடுப்பதற்கு—ஃப்ரம் தி ஹெல்த் பாயிண்ட் ஆப் வியூ—அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு கண்ணப்பன் : தலைவரவர்களே, கோயில் திருப்பணிப் பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கப்பட்டு வருகிறது. இது சுகாதார இலாகா சம்பந்தப்பட்டது. தனிக் கேள்வி போட வேண்டும்.

யுனெஸ்கோ நிறுவனத்தால் கோவில்களுக்கு நிதியுதவி

*** 442 வினா—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

யுனெஸ்கோ நிறுவனத்தின் சார்பில் 1970-71-ல் தமிழகத்தில் எத்தனை கோவில்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான பண்பாட்டு நிறுவனத்தின் சார்பில் நிதி உதவி அளிக்கப்படுவதில்லை. ஆனால் இந்தியாவில் தயாரிக்கப்படாத பொருள்களின் வடிவில் அவ்வுதவி அளிக்கப்படுகிறது. மேற்படி நிறுவனம் திருவரங்கத்திலுள்ள அரங்கநாதஸ்வாமி கோயிலுக்கு மட்டும் ரூ. 21,818 மதிப்புள்ள "பென்கேப்சுலா" ஐ (ஒருவகைத் தெளிக்கும் எண்ணெ) 1970-71-ல் வழங்கியுள்ளது.

மதுரை நகருக்குத் தங்கும் விடுதி.

*** 443 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறநிலையத்துறையின் சார்பில் மதுரை நகரில் தங்கும் விடுதிகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]